1972 ஆகஸ்ட் 21]

வரி விதித்திருக்கிறார்கள். அதன்மூலம் மத்திய அரசுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. அதே போல், நம்முடைய அரசு டபுள், டிரெபுள், ஜாக்பாட் இவைகளிலே வெற்றி பெறுகின்றவர்களுக்கு, அதிலே 10 சதவிகிதமோ, 20 சதவிகிதமோ வரி விதித்தால், அதன்மூலம் அரசுக்கு சுமார் ரூ. 50 லட்சம் கிடைக்கும். அதைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே மத்திய அரசு அதுமாதிரி வரி விதித்திருக்கிறார்கள். தமிழக அரசு வரி விதிப்பதைப் பற்றி பரிசீலிக்கலாம். ஆனால் முடியுமா என்பது சந்தேகம்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, சென்னை குதிரைப் பந்தய சங்கத்திடமிருந்து இரண்டு காரி ஓவர்களை அனுமதிக்க வேண்டுமென்று விண்ணப்பம் வந்திருக்கிறதா? அப்படி இருந்தால் அதை அனுமதிப்பதன் மூலம் அரசின் வருமானத்தை அதிகரிக்க அரசு முயலுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒரு நாள் காரி ஓவரைத் தான் அரசு அனுமதித்திருக்கிறது. 2 நாள் காரி ஓவரை அனுமதித்தால், தொகை அதிகமாவதன் காரணமாக, வேறு சில காரியங்கள் நடந்து, அதன்காரணமாக லா அண்ட் ஆர்டரைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற காரணத்தினாலும், பணம் ரொம்ப இருந்தால், தவறுகள் இருக்குமோ என்று வதந்திகள் நடமாடுகின்ற காரணத்தாலும் இரண்டு நாள் காரி ஓவருக்கு அனுமதி இல்லை யென்று தெரிவித்துவிட்டோம்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்த குதிரைப் பந்தய திட்டம் சூதாட்ட முறையில் இருப்பதாகச் சில பெரியவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, அதுபற்றி அரசு என்ன கருத்தைத் தெரிவிக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சூதாட்டம் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். சூதாட்டம் சூதாட்டம் தான்.

***219. வினா—திரு. எஸ். கணேசன்:** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கேளிக்கை வரி மீது நாட்டுப் பாதுகாப்பு நிதிக்காக விதிக்கப்பட்ட கூடுதல் சர்சார்ஜ் வரி மூலம் 1972-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் கிடைத்தத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கேளிக்கை வரி மீது விதிக்கப்பட்ட கூடுதல் சர்சார்ஜ் வரி மூலம் ஜனவரித் திங்களில் கிடைத்த தொகை ரூ. 12.32 இலட்சம்.

திரு. எஸ். கணேசன்: இந்தக் கூடுதல் சர்சார்ஜ் வரிமூலம் நாட்டுப் பாது காப்பு நிதிக்காக இதுவரை கிடைத்திருக்கின்ற தொகை எவ்வளவு? நம்மு டைய மாநிலத்தின் சார்பில், நாட்டுப் பாதுகாப்புக்கான நிதி இந்தியப் பிரத மரிடம் அளிக்கப் பட்டிருக்கிறதே, இந்த நிலையில் மேலும் இந்த வரியை நீடிக்க அரசு விரும்புகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நான் விடை அளிக்கும்போது சொன்னேன், ஏற்கனவே சட்டம் பிறப்பிக்கும்போது வார்த்தைகள் எச்சரிக்கையாகப் போடப்பட்டிருக்கின்றன. நாட்டுப் பாது காப்புக்கு என்ற வார்த்தையை நான் சேர்க்கவில்லை. தமிழக அரசினுடைய வருவாயைப் பெருக்குவதற்கும் என்று சொன்னேன். ஆகவே, இந்த வரியை இப்பொழுது நீக்குவதாக இல்லை. வருமானத்தைப் பற்றி இதுவரையில் எவ்வளவு என்ற தகவல் இல்லை. ஆனால், மார்ச் மாதம் முடிய தமிழக அரசுக்குக் கிடைத்திருக்கிற வருமானம் ரூ. 50.97 லட்சமாகும்.

திரு. எஸ். கணேசன்: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்டதற்குப் பிறகு இந்தச் சினிமா தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இந்த ஆண்டு மதுக்கடைகள் மிக அதிக மான அளவுக்கு ஏலம் போயிருக்கின்றன. இது மேலும் இந்தத் தொழிலை பாதிக்கும் என்பதால் இதை அரசாங்கம் அனுதாபத்தோடு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கேளிக்கை வரி வசூலை பார்க்கும் போது, பாதிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. சினிமாத் தொழில், நன்றாக சிறப்பாக இருப்பதாகத்தான் எனக்குக் காட்சி அளிக்கிறது.

மத்திய சிறைச்சாலைகளில் செய்யப்பட்ட மரச்சாமான்கள்

* 220 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1971-72-ம் ஆண்டில் தமிழக மத்திய சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளால் செய்யப்பட்ட மரச் சாமான்களின் மதிப்பீட்டுத் தொகை சிறைச் சாலை வாரியாக எவ்வளவு?